**கொவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகள் தயார்படுத்தலிற்கான மேலதிக நிதியிடல் செயற்திட்டம் - 2021**

---

கொவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகள் தயார்படுத்தலிற்கான மேலதிக நிதியிடல் செயற்திட்டத்தின் 2020 யூலை 23 தொடக்கம் 2021 மார்ச் 31 வரையான கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட 2019 பெப்ரவரி 25 ஆந் திகதிய மானிட நிதியிடலிற்கான நியம நிபந்தனைகளின் 2.07 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் கொவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகள் தயார்படுத்தலிற்கான மேலதிக நிதியிடல் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொவிட்-19 பெருந்தொற்றினை தடுத்து குறைத்தலும் பரவும் அச்சுறுத்தலுக்கு பதிலளித்தலும் இலங்கையில் பொது சுகாதார தயார்படுத்தலுக்கான தேசிய முறைமையை வலுப்படுத்தலுமே செயற்திட்டத்தின் நோக்கமாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 411.45 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.72 மில்லியனானதுடன் இது சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் வழங்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

---

செயற்திட்டத்தின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையியையும் பெறுகை மற்றும் கொடுப்பனவு கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காளரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு மற்றும் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட 2019 யூலை 09 ஆந் திகதிய சீஜீஆர்ஜ/2019/03 – 01 ஆம் இலக்க கடிதம் (ஜஎன்எஸ் மற்றும் சீஜஆர்) | ரூபா 3.7 மில்லியன் மொத்தத் தொகையான பெறுமதி சேர் வரியானது முறையான வரி பற்றுச்சீட்டு இன்றி 20 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்ட காலப்பகுதியில் ஒப்பந்தகாரர்கள் மற்றும் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பான தகவல்கள் உள்நாட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் உரிய நிறுவனம் அல்லது நபரானவர் செயற்திறனான வரி செலுத்துபவரா என்பதை உறுதிப்படுத்தாமல் செயற்திட்டமானது ரூபா 549,824 தொகையை பெறுமதி சேர் வரியாக செலுத்தியிருந்தது. | பதிவுசெய்யப்பட்ட வற் இலக்கம் மற்றும் வரி பற்றுச்சீட்டுக்களுடன் வற் கொடுப்பனவு கோரப்பட்டதுடன் இது செலுத்தப்பட்டிருந்தது. வரி வருமானங்களை அனுப்புவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வரி அறிக்கைகளின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

3. பௌதீகச் செயலாற்றல்

3.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சுகாதார மேம்படுத்தல் பணியகத்தின் வதிவிடக்கட்டிடத்தின் தரைத்தளத்தின் புனரமைப்பின் போது ரூபா 233,346 பெறுமதியிடப்பட்ட இரண்டு வேலை உருப்படிகள் வேண்டப்பட்ட நியமத்திற்கிணங்க நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தப் பெறுகையானது அரச பெறுகை வழிகாட்டியின் 2.12(அ), 2.11.2, 3.4.2(அ), 5.4.8 (அ), 5.3.5 (ஆ), 8.9.1 மற்றும் 8.12.2 ஆம் வழிகாட்டிகளுடன் இணங்கியிருக்கவில்லை. அத்துடன் ரூபா | செயற்திட்டப் பணிப்பாளர் எதிர்காலத்தில் தவறுகள் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்காக 2.1.2(அ), 2.11.2, 3.4.2(அ), 5.4.8 (அ), 5.3.5 (ஆ), 8.9.1, 8.9.1 (அ) மற்றும் 8.12.2 ஆம் வழிகாட்டிகளுடன் கண்டிப்பாக இணங்க வேண்டும். | அரச பெறுகை வழிகாட்டிகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 426,724 பெறுமதியாக 20 மேலதிக வேலை உருப்படிகளின் விகிதப் பகுப்பாய்வு இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுள்ள உரிய உத்தியோகத்தரால் பிரேரிக்கப்பட்டோ அல்லது அங்கீகரிக்கப்பட்டோ இருக்கவில்லை. | | |
| (ஆ) | முல்லேரியாவா தாதி பாடசாலையின் சமையலறை மற்றும் சாப்பாட்டு அறையின் நவீனமயமாக்கலிற்கான ஒப்பந்தத்துடன் தொடர்பான ரூபா 493,399 பெறுமதியிலான 07 மேலதிக வேலை உருப்படிகளின் விகிதப்பகுப்பாய்வு தொழில்நுட்ப அறிவுள்ள பொறுப்பான உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 212,244 மேலதிகக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது என 2022 சனவரி 06 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப்பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | விகிதப்பகுப்பாய்வினை அங்கீகரித்து அனுமதிபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து சிபாரிசினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ரூபா 18 மில்லியன் மொத்தக் கிரயத்தில் தொற்றுநோயியல் பிரிவால் அமுல்படுத்தப்பட்ட மூன்று பெறுகை வேலைகள் அரச பெறுகை வழிகாட்டிகளின் 2.12(அ), 5.4.8(அ), 5.3.5(ஆ), 8.9.1 மற்றும் 8.12.2 ஆம் வழிகாட்டிகளுடன் இணங்கியிருக்கவில்லை. அத்துடன் ரூபா 2.1 மில்லியன் பெறுமதியிடப்பட்ட 36 மேலதிக வேலை உருப்படிகளின் விகிதப்பகுப்பாய்வு தொழில்நுட்ப அறிவுள்ள பொறுப்பான உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த தவறுகள் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்காக அரச பெறுகை வழிகாட்டிகளின் 2.1.2(அ), 2.11.2, 3.4.2(அ), 5.4.8(அ), 5.3.5(ஆ), 8.9.1, 8.9.1(அ) மற்றும் 8.12.2 ஆம் வழிகாட்டிகளுடன் கண்டிப்பாக இணங்குவதற்கு செயற்திட்டப்பணிப்பாளர் அறிவித்திருந்தார். | அரச பெறுகை வழிகாட்டிகளுடன் இணங்குவதற்கும் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து சிபாரிசினைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் போது 68 சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய நிறுவகங்களிற்கு விநியோகிப்பதற்கு ரூபா 89 மில்லியனில் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணம், இயந்திரம், உபகரணம் மற்றும் தளபாடத்தினை நிருபிப்பதற்கான பொருள் விநியோகித்தல் தாள் மற்றும் பொருள் பெறுகைத் தாள் போன்ற கணக்காய்வுச் சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. மேலும், அத்தகைய சொத்துக்கள் செயற்திட்ட இறுதிக்காலப்பகுதியில் முறையாக மாற்றப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களினை செயற்திட்ட இறுதிக்காலப்பகுதியில் முறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்தச் சொத்துக்கள் முறையாக மாற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 71.2 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம் மற்றும் ரூபா 34.3 மில்லியன் கிரயத்தில் அமுல்படுத்தப்பட்ட புனரமைப்பு வேலைகள் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தில் சிகாஸ் நிகழ்ச்சியினை அமுல்படுத்தாமையால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம் மற்றும் புனரமைப்பு வேலைகள் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தில் சிகாஸ் நிகழ்ச்சியினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். |